திரித்துவக் குடும்ப மாதாந்திர மலர்

# திரித்துவச்சுடர்

தனிச்சுற்றுக்கு மட்டும்

டிசம்பர் 2023




சிறுவர் நாள் கொண்டாட்ட நிகழ்வில் நமது ஆலய சிறுவர்கள் மகிழ்ச்சியாக கலந்துகொண்ட தருணம்.

## பங்குத் தந்தையின் செய்தி

எனது அருமையான பங்கு மக்களே! தூய திரித்துவக் கடவுளின் ஆசீரும் அருளும் எந்நாளும் உங்களோடு இருப்பதாக. நவம்பர் மாதத்தில் இறந்த ஆன்மாக்களுக்காக சிறப்பாக மன்றாடினோம். அன்பியங்களில் திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து பலருடைய பங்கேற்போடு, இறைவன் இவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியை தந்திட உயிர்ப்பின் அடையாளமான மெழுகுதிரியை ஏந்தியும் மன்றாடினோம்.

2023 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தை தொடங்கியுள்ளோம். இம்மாதத்தில் திருவருகைக்காலமும் அதைத்தொடர்ந்து, கிறிஸ்து பிறப்பின் விழாவையும் கொண்டாட உள்ளோம். “ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்; ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார்; ஆட்சி பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும்; அவர் திருப்பெயரோ ‘வியத்தகு ஆலோசகர், வலிமை மிகு இறைவன், என்றுமுள்ள தந்தை, அமைதியின் அரசர் என்று அழைக்கப்படும்”.(எசா.9:6) விண்ணகத் தந்தை நம் ஒவ்வொருவரையும் எவ்வளவு அன்பு செய்கிறார் என்பதை வெளிப்படுத்தும் வண்ணமாக, தன் ஒரே மகனையே நமது மீட்புக்காக தந்துள்ளார். இவருடைய பிறப்பு நம் அனைவருக்கும், ஏன் படைப்பு அனைத்துக்குமே மகிழ்ச்சியை தரக்கூடியது. நமது பாவங்களிலிருந்து நம்மை மீட்டு விண்ணகத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் அற்புத நிகழ்வு. மனித குலமே ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த வரலாற்று தருணமிது.

Merry Christmas & HAPPY NEW YEAR 2024

## திருத்தந்தையின் மன்றாட்டுக்கருத்து



**மாற்று திறனாளிகளுக்காக - மாற்றுத் திறனாளிகள் சமூகத்தின் கவனத்தில் மையமாக இருக்க வேண்டும் என்றும் அவர்களது செயல்பாட்டு பங்கேற்பை உள்ளடக்கும் திட்டங்களை நிறுவனங்கள் வழங்கிடவும் நாம் மன்றாடுவோம்.**

**We pray that people living with disabilities may be at the centre of attention in society, and that institutions may offer inclusive programs which value their active participation.**

இப்பெருவிழாவை பொருளுள்ள வகையில் எல்லா நிலைகளிலும் கொண்டாடி மகிழ்வோம். கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை எல்லோருடைய உள்ளங்களிலும் விதைப்போம்.

**My dear brothers and sisters, may the blessings of the Holy Trinity be with you all. In the month of November we prayed in a very special way for all the departed souls, offering Holy Mass and by conducting many charitable activities. Let us continue to pray to give them eternal rest. “For a child has been born for us, a son given to us; authority rests upon his shoulders; and he is named Wonderful Counsellor, Mighty God, Everlasting Father, Prince of Peace”. (Isaiah 9:6). We are starting the season of Advent and followed by the celebration of Christmas. God’s Son Jesus Christ had come down to save all of us from the valley of darkness. Let us celebrate the birth of Jesus in a meaningful way. Let us try our best to sow the seeds of Christmas joy in every heart. May God bless you all.**

உங்கள் அன்பு பங்குப் பணியாளர்
பீட்டர் தும்மா

## உணவுத்திருவிழா 'A' மற்றும் 'B' ZONE அன்பியங்கள்





நவம்பர் மாதம் 5 ஆம் தேதி A மற்றும் B பகுதிகளைச் சார்ந்த அன்பிய மக்கள் நற்செய்தி பணிக்காக மிகச் சிறப்பான வகையில் உணவுத் திருவிழாவை ஏற்பாடு செய்தனர். சிறப்பாக திட்டமிட்டு அனைவருடைய ஈடுபாட்டுடனும் மிக நல்ல முறையில் இவ்விழா அமைந்தது. அன்பியங்களோடு இளைஞர்களும் பல விளையாட்டுக்களை ஏற்பாடு செய்திருந்தனர். அன்று மழை இல்லாமல் இயற்கையும் நமக்கு சாதகமாக இருந்தது. இதற்காக அன்பிய பொறுப்பாளர்கள் முழு உற்சாகத்தோடு ஈடுபட்டனர். அன்பிய இறைமக்கள் மற்றும் பங்கு மக்கள் அனைவருக்கும் உளமார நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**On November 5 (Sunday) A and B Zones organised a food carnival to raise funds for the mission purpose. All the members of these BCCs along with their coordinators actively organised this event. There was a lot of sacrifice from everyone. We appreciate A and B zones and all our parishioners for their joyful and enthusiastic participation in this food carnival.**

---

## குடும்ப விவிலிய வினாவிடை

செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் 7 வாரங்கள் பழைய ஏற்பாட்டின் (1 அரசர்கள், 2 அரசர்கள், 1குறிப்பேடு, 2 குறிப்பேடு, எஸ்ரா, நெகேமியா, எஸ்தர்) புத்தகங்களிலிருந்து குடும்ப விவிலிய வினா விடை போட்டியை ஏற்பாடு செய்தோம். மிகவும் உற்சாகத்தோடு 78 குடும்பங்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது. இதை முன்னிருந்து நடத்திய அருட்தந்தை சூசை ராஜ் மற்றும் அருட்சகோதரிகளுக்கு நமது மனம் நிறைந்த நன்றி. தொடர்ந்து ஆர்வத்தோடு இறைவார்த்தையை ஒவ்வொருநாளும் செப உணர்வோடு படிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.




**In the months of September and October we had a family bible quiz competition. We thank Rev. Fr. Susai Raj, Assistant Parish Priest and Rev. Sisters for organising this event. Seventy eight families took part in the competition with great enthusiasm and prizes were distributed. Please continue to read the Word of God everyday with the prayerful heart.**

---

## குழந்தைகள் நாள் விழா

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14 ஆம் தேதி குழந்தைகள் நாளாக கொண்டாடுகிறோம். ஒவ்வொரு சமூகத்திலும் குழந்தைகள் முக்கியமானவர்கள். குழந்தைகளின் ஆக்கபூர்வமான வளர்ச்சியில் நாம் அனைவரும் அக்கறைக் காட்ட வேண்டும். அவர்களின் முழு திறனை வெளிப்படுத்த பல வாய்ப்புகளை நாம் உருவாக்க வேண்டும். நமது பங்கில் நவம்பர் 19 ஆம் தேதி குழந்தைகள் நாளை இயேசுவின் கண்மணிகள் என்ற தலைப்பில் கலை நிகழ்சிகளை நடத்தி சிறப்பித்தோம். இதற்கான தயாரிப்புகளை செய்த ஞாயிறு மறைக்கல்வி குழுவினருக்கு நமது உளப்பூர்வமான நன்றி. நம் குழந்தைகள் அனைவரையும் அன்புடன் பாராட்டுகிறோம்.

**On November 19 (Sunday) we celebrated Children's Day in our parish. Children are important in every society and one should create opportunities for them to exhibit their potential. Our sincere thanks to the catechism team for the keen interest shown to organise cultural programs to keep our children joyful.**



## புனித வின்சென்ட் தே பவுல் சபை

புனித வின்சென்ட் தே பவுல் சபை நமது பங்கில் சிறப்பாக செயல்படுகிறது. ஒரு ஏழை குடும்பத்திற்கு சிறிய வீட்டை கட்டி தந்திருக்கிறார்கள். இவர்களின் முயற்சியை பாராட்டுகிறோம். பொருள் உதவியையும் உடல் உழைப்பையும் தந்தவர்களுக்கு நன்றி.
நவம்பர் மாதம் 19 ஆம் தேதி வானகரம் அப்பல்லோ மருத்துவ மனையோடு இணைந்து இலவச மருத்துவ முகாமை ஏற்பாடு செய்தனர். 1 மணிநேரத்துக்கு இதயத்தை எவ்வாறு பாதுகாப்பது என விழிப்புணர்வு கருத்துக்களை அப்பல்லோ மருத்துவமனை இதய நிபுணர் மருத்துவர் நிக்கில் மிகச்சிறப்பாக பகிர்ந்து கொண்டார். அதைத் தொடர்ந்து சர்க்கரை நோய், இரத்த அழுத்தம், ECG, ECHO போன்ற பரிசோதனைகள் பலருக்கும் மேற்கொள்ளப்பட்டன. சிறப்பு மருத்துவர்கள் பலரும் இம்முகாமில் கலந்து கொண்டு மக்களுக்கு உதவினர். நம் பங்கு மக்கள் பலரும் பயன்பெரும் வகையில் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட புனித வின்சென்ட் தே பவுல் சபையினருக்கும் மற்றும் அப்பல்லோ மருத்துவ குழுவினருக்கும் நமது பாராட்டுகளையும், நன்றிகளையும் உரித்தாக்கிக் கொள்கிறோம்.

**Vincent de Paul Society had built a small house for a deserving poor family. We appreciate and thank the members for the kind gesture.
On November 19 (Sunday) St. Vincent de Paul Society and Apollo Hospital, Vanagaram jointly organised a free medical camp. Dr. Nikhil, a Cardiologist from Apollo, spoke about Cardio related issues for one an hour. Then random blood sugar, BP, ECG, ECHO were done for more than 100 people. Cardiologist, Orthopedic, and General Physician were also part of this medical camp. Sincere thanks to all the doctors and members of the society.**

---

## இறந்தோருக்கான திருப்பலி

நவம்பர் மாதம் முழுவதுமாக ஒவ்வொரு அன்பியத்திலும் சிறப்பு திருப்பலிகளை ஏற்பாடு செய்து அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது. ஒரு சிலர் இறந்தோரின் புகைப்படங்களை திருப்பலிக்குக் கொண்டு வந்தனர். அனைவரின் கரங்களிலும் எரியும் மெழுகுதிரிகளோடு சிறப்பு செபம் ஏறெடுக்கப்பட்டது. பலரும் உற்சாகத்தோடு இச்சிறப்பு திருப்பலியில் பங்கெடுத்தனர். ஒரு சில நாட்களில் மழைபெய்தாலும் உற்சாகம் குறையவில்லை. இதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்த அன்பிய பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து உறுப்பினருக்கும் நன்றி. குறிப்பாக திருப்பலி நிறைவேற்ற வீடுகள் தந்தவர்களுக்கு நன்றி. இந்த முயற்சியில் உடன் உழைத்த உதவி பங்கு தந்தைக்கும் அருட்சகோதரிகளுக்கும் நன்றி.

**We arranged special Holy Mass in every BCC to pray for the departed souls. Many people participated in this special Mass. We thank the BCC coordinators and other members of BCCs who made it possible. A special thanks to those who made arrangements to organise mass in their homes, not forgetting Rev. Fr. Susai Raj and Rev. Sisters for the invaluable time and efforts.**

---

## தேர்வுக்கான வாழ்த்துகள்

இந்த நாட்களில் பள்ளியில் பயிலும் நமது மாணவ மாணவியர் அரையாண்டுத் தேர்வுகளை எழுதுவர். சிறப்பாக தேர்வுகளை எழுத செபிக்கிறோம், வாழ்த்துகிறோம். கவனம் சிதறாமல், ஆர்வமுடன் படிப்பதற்கான சூழலை பெற்றோர்கள் அவர்களுக்கு அமைத்து தர கேட்டுக்கொள்கிறோம்.

**As our children are preparing for the Half Yearly exam now, let's pray for their success and that they are given a conducive atmosphere to study well for their exams.**

## நற்செய்தி பணிக்கான ஏலம்

நற்செய்தி அறிவிப்பு பணியானது நம் அனைவராலும் செய்யப்பட வேண்டியது. ஆண்டுக்கு ஒருமுறை மட்டுமல்ல மாறாக வாய்ப்புகள் கிடைக்கும்போதெல்லாம் கடவுளின் நற்செய்தி அறிவிப்புப் பணியை இன்னும் அதிகமாக ஊக்கப்படுத்த பொருள் திரட்டும் பல முயற்சிகளை மேற்கொண்டோம். 26 ஆம் தேதி ஏலம் நிகழ்வை நடத்தினோம். இதற்காக நமது அன்பிய பொறுப்பாளர்கள், அன்பிய இளையோர் பொறுப்பாளர்கள், மற்றும் பெண்கள் பொறுப்பாளர்கள் இணைந்து குடும்பங்களை சந்தித்து புதிய பொருட்களை அவர்களிடமிருந்து பெற்று ஏலத்தை நடத்த உதவினார்கள். இம்முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைனருக்கும் நமது நன்றி. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

**For the evangelization work we organised different programs to generate funds. One such event was an auction for the Mission which was held on Nov. 26. BCC coordinators, women's representatives and youth representatives visited families and collected new articles for the auction. Efforts put in by the parishioners for this cause is highly appreciated. God Bless you all.**

## தவக்கால திருப்பயணம்

தவக்காலத்தில் நமது இறை உணர்வை இன்னும் அதிகப்படுத்தும்படியாக பல நிகழ்வுகளை நடத்த உள்ளோம். அதில் முக்கியமான நிகழ்வு தவக்கால திருப்பயணம். 2024 ஆம் ஆண்டு நமக்கு 25 ஆவது தவக்கால திருப்பயணமாகும். எனவே தவக்கால திருப்பயண குழுவை அமைத்து இந்த வெள்ளி விழா தவக்கால திருப்பயண நிகழ்வை சிறப்பாக அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி வருகின்ற மார்ச் மாதம் 8,9,10 தினங்களில் புனித தேவசகாயம் திருத்தலங்களுக்கும் மற்றும் திருவனந்தபுரத்தில் உள்ள முக்கிய ஆலயங்களுக்கும் திருப்பயணம் மேற்கொள்ளவிருக்கிறோம். 127 பேர் இந்த பயணத்தில் இணைந்துள்ளனர். இவர்களுக்காக இரயில் பயணச்சீட்டு முன்பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு நபருக்கு 3000 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதற்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்கின்ற திருப்பயண குழுவினருக்கு நன்றி.

**We are planning a Lenten pilgrimage to visit places connected with St. Devasahayam and also a few important churches in Trivandrum. We have formed a group to take this pilgrimage forward. This is our 25th year of lenten pilgrimage. This trip is scheduled from March 8 to10, 2024. Other details of this program will be worked out by this group. 127 people have confirmed and the train tickets are already booked. We sincerely thank the lenten pilgrimage group for their unstinted support.**

## ஐரோப்பா பயணம்

2024 மே மாதம் 5 தேதி முதல் 20 ஆம் தேதி வரை சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுக்கல், வத்திக்கன், மற்றும் இத்தாலிய நாடுகளுக்கு செல்லவிருக்கிறோம். உலக புகழ் பெற்ற லூர்து நகர், பாத்திமா நகர், பதுவை நகர், அசிசி நகர், மற்றும் மிலான் நகரத்து திருத்தலங்களையும் மற்ற சுற்றுலா தலங்களுக்கும் செல்லவிருக்கிறோம். அதிக பட்சமாக 40 பேர் மட்டுமே இதில் கலந்து கொள்ள முடியும். நமது பங்கில் உள்ளவர்களும், மற்றவர்களும் இதில் கலந்து கொள்ளலாம். நமது பங்கில் உள்ளவர்கள் இதில் கலந்து கொள்ள விரும்பினால் அல்லது உங்களுக்கு தெரிந்தவர்கள் கலந்து கொள்ள விரும்பினால் விரைவில் பங்கு தந்தையை அணுகவும். ஒரு நபருக்கான ரூபாய் 2,96,000/– இதில் சேர விரும்புகிறவர்கள் உடனடியாக ரூபாய் 60,000/– செலுத்தி உங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ளவும். தாமதம் செய்ய வேண்டாம்.

**We are organizing a tour of Europe from May 5 to 20, 2024 and plan to visit Switzerland, France, Spain, Portugal, Italy, and the Vatican. World famous Lourdes, Fatima, Pisa, Padua, Assisi, Rome, and Milan are also included. Our parishioners or any other person interested can join in this tour. Only a maximum of 40 people can make it. Anyone interested may pay an advance of Rs 60,000 and register their names with the parish priest. The total amount for a person is Rs. 2, 96,000.**

## திருவருகைக்கால தியானம்

ஆண்டவருடைய பிறப்பு விழாவிற்கான சிறப்பு தியானம் டிசம்பர் 8,9,10 தினங்களில் நடைபெற உள்ளது. இதை தியான மையம், தருமபுரியை சேர்ந்த அருட்தந்தை ஸ்டீபன் குழுவினர் முன்னிருந்து நடத்த உள்ளனர். வெள்ளி, சனி நாட்களில் மாலை 6:00 மணி முதல் 8:30 வரையிலும், ஞாயிறு காலை 8:30 மணி முதல் 1:00 வரையிலும் இத்தியானம் நடைபெற உள்ளது. அனைவரும் இத்தியானத்தில் பங்கெடுத்து கிறிஸ்து பிறப்பு விழாவை மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம். இந்த நாட்களில் தியானம் முடிந்த பிறகு உணவு வழங்கப்படும். உணவு கொடுக்க விரும்புவோர் பங்குத்தந்தையை அணுகவும்.

**We have organized an advent retreat from December 8 to 10. Fr. Stephen and his team from Retreat Centre, Dharmapuri will animate this spiritual experience. On Friday and Saturday the retreat will be from 6.00 to 8.30 p.m, and on Sunday from 8:30 a.m to 1.00 p.m. We request all parishioners to attend. Food will be served on all days of the retreat. If anyone is interested in sponsoring the food, kindly contact the parish priest.**

## கிறிஸ்து பிறப்பு விழா நிகழ்வுகள்

கிறிஸ்து பிறப்பு விழா உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்ற விழா. இவ்விழா மகிழ்ச்சியின் விழா; நம்பிக்கையின் விழா; இவ்விழாவை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாட பல முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

- அன்பியங்களில் இல்லங்களை சந்தித்து கிறிஸ்து பிறப்பு பாடல்களை பாடி நம் உள்ளார்ந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்த உள்ளோம்.
- டிசம்பர் மாத அன்பிய கூட்டம் கிறிஸ்துபிறப்பு விழா நிகழ்வாக அமைய கேட்டுக்கொள்கிறோம்.
- ஞாயிறு மறைக்கல்வி பிள்ளைகளுக்கு சிறப்பு கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்ட நிகழ்வு டிசம்பர் 16 ஆம் தேதி சனிக்கிழமை மாலை நடைபெறும்.
- புனித வின்செனட் தே பவுல் சபையில் கிறிஸ்து பிறப்பு நிகழ்வு டிசம்பர் 17 ஆம் தேதி ஞாயிறு மாலை நடைபெறும்.
- 24–12–2023 ஞாயிறு (காலை): தமிழ் திருப்பலி காலை 6:00 மற்றும் 8:45 மணிக்கு நடைபெறும். ஆங்கிலத்தில் திருப்பலி, காலை 7:00 மணிக்கு நடைபெறும்.
- 24–12–2023 (இரவு): 11 மணி முதல் 11:30 வரை – கிறிஸ்து பிறப்பு பாடல்கள், தொடர்ந்து நள்ளிரவு திருப்பலி.
- 25–12–2023 (காலை): 7:00 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலியும், 8:45 மணிக்கு தமிழில் திருப்பலியும் நடைபெறும். அன்று மாலை திருப்பலி இல்லை.
- நமது பாங்கில் உள்ள ஏழைகளுக்கு கிறிஸ்மஸ் காலத்தில் உதவ தாராள உள்ளத்தோடு முன்வரவும்.

**We will have Christmas celebration in different levels:**

- **Christmas carols will take place in our BCCs.**
- **We will have Christmas celebration for catechism children on December 16 (Saturday) at .6.30 pm.**
- **St. Vincent de Paul Society will have Christmas celebrations on December 17 (Sunday) at 6.30 p.m.**
- **Please contribute generously to help the poor families in our parish for Christmas.**
- **On December 24 (Sunday) we will have Tamil mass at 6.00 a.m and 8.45 a.m.**
- **11.00 to 11.30 p.m Christmas Carols, the mass will be at 11.30 p.m. On December 25 (Monday) at 7.00 a.m English mass and 8.45 a.m Tamil mass.**

# 2023 DECEMBER டிசம்பர் 2023

## திருவழிபாட்டு நாட்கள்

**03–12–2023**
**திருவருகைக் கால முதல் ஞாயிறு**
எசா63:16–17;64:1,3–8/ தி.பா. 80:1–2, 14–15,17–18/ கொரி. 1:3–9/ மாற்கு 13:33–37

**04–12–2023 திங்கள்**
**புனித பிரான்சிஸ் சவேரியார் – அருள்பணியாளர் விழா**
எசா. 61:1–3/ 1கொரி. 9:16–19, 22–23/ தி.பா. 117:1–2/ மாற்கு 16:15–20

**08–12–2023 வெள்ளி**
**புனித கன்னி மரியாவின் அமல உற்பவம் – பெருவிழா**
தொ.நூ. 3:9–15, 20/ தி.பா. 98:1–4, / எபே 1:3–6, 11–2/ லூக்கா 1:26–38

**10–12–2023 ஞாயிறு**
**திருவருகைக் காலம் 2–ஆம் ஞாயிறு**
எசா. 40:1–5, 9–11/ தி.பா. 85:8–13/ பேது. 3:8–14/ மாற்கு 1:1–8

**17–12–2023 ஞாயிறு**
**திருவருகைக் காலம் 3–ஆம் ஞாயிறு**
எசா. 61:1–2,10–11/ லூக். 1:47–50,53–54/ 1தெச. 5:16–24/ யோவான் 1:6–8, 19–28

**24–12–2023 ஞாயிறு**
**திருவருகைக் காலம் 4–ஆம் ஞாயிறு**
2சாமு. 7:1–5, 8–12/ தி.பா. 89:1–4, 26, 28/ உரோ. 16:25–27/ லூக்கா 1:26–38

**25–12–2023 திங்கள்**
**கிறிஸ்து பிறப்பு – நள்ளிரவு திருப்பலி – பெருவிழா**
எசா. 9:2–4, 6–7/ தி.பா. 96:1–2, 2–3,11–13/ தீத். 2:11–14/ லூக்கா 2:1–14

**கிறிஸ்து பிறப்பு – பகல் திருப்பலி – பெருவிழா**
எசா. 52:7–10/ தி.பா. 98:1–6/ எபி. 1:1–6/ யோவான் 1:1–18

**26–12–2023 செவ்வாய்**
**புனித ஸ்தேவான் –முதல் மறைசாட்சி – விழா**
தி.ப. 6:8–10;7:54–60/ தி.பா. 31:1, 3, 5–7, 15–16/ மத்தேயு 10:17–22

**27–12–2023 புதன்**
**புனித யோவான் – திருத்தூதர், நற்செய்தியாளர் – விழா**
1யோவா. 1:1–4/ தி.பா. 97:1–2, 5–6, 11, 12/ யோவான் . 20:2–8

**28–12–2023 வியாழன்**
**புனித மாசில்லாக் குழந்தைகள் – மறைசாட்சியர் – விழா**
1யோவா. 1:5–2:2/ தி.பா. 124:2–3, 4–5, 7, 8/ மத்தேயு 2:13–18

**31–12–2023 ஞாயிறு**
**இயேசு, மரியா, யோசேப்பின் திருக்குடும்பம் – விழா**
தொ.நூ. 15:1–6, 21:1–3/ தி.பா. 105:1–9/ எபி. 11:8, 11–12, 17–19/ லூக்கா 2:22–40

## பாடகர் குழுவினருக்கு நன்றி

ஆண்டு முழுவதும் திருவழிபாட்டில் நமக்கு உதவி செய்கின்ற அனைத்து பாடகர் குழுவினருக்கும் நமது பெருத்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்கள் பணி என்றும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**We sincerely appreciate all our choir members for their great contribution for our liturgy. May God bless them abundantly.**

## உலக நாட்கள்

| | | |
|---|---|---|
| டிசம்பர் 1 | : | உலக எய்ட்ஸ் உயிர்க் கொல்லி நோய் விழிப்புணர்வு நாள் |
| டிசம்பர் 2 | : | தேசிய மாசு கட்டுபாட்டு நாள், அடிமைத்தனத்தை ஒழிப்பதற்கான உலக நாள் |
| டிசம்பர் 3 | : | உலக மாற்று திறனாளிகள் நாள் |
| டிசம்பர் 4 | : | உலக கடற்படை நாள் |
| டிசம்பர் 5 | : | உலக தன்னார்வலர் நாள் |
| டிசம்பர் 6 | : | அம்பேத்காரின் நினைவு நாள் |
| டிசம்பர் 9 | : | உலக ஊழல் எதிர்ப்பு நாள் |
| டிசம்பர் 10 | : | மனித உரிமைகள் நாள் |
| டிசம்பர் 18 | : | இந்தியாவில் சிறுபான்மையினர் உரிமைகள் நாள் |
| டிசம்பர் 20 | : | மனித ஒற்றுமை நாள் |
| டிசம்பர் 24 | : | தேசிய நுகர்வோர் உரிமைகள் நாள் |
| டிசம்பர் 25 | : | கிறிஸ்துமஸ் |

## நமது பங்கின் நவம்பர் மாத அருட்சாதன நிகழ்வுகள்

### திருமுழுக்கு

- மேத்யூ
- ஷான் ஆண்டன்ராஜ்

வரவேற்கிறோம்



## திருக்காட்சிப் பெருவிழா

ஜனவரி மாதம் 7ம் தேதியன்று திருக்காட்சி பெருவிழாவைக் கொண்டாடுகிறோம். கீழ்த்திசை ஞானிகள் இயேசு பாலனைக் கண்டு பரிசுகளை வழங்கி ஆராதித்தது போல நாமும் நமது பங்கில் உடல் நோயினாலும் முதுமையினாலும் ஆலயத்திற்கே வரமுடியாமல் படுத்த படுக்கையாய் இருப்பவர்களை சந்தித்து பரிசுகளை வழங்கி கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகிறோம். எனவே அன்பிய பொறுப்பாளர்களும், அன்பிய பெரியோர் பொறுப்பாளர்களும் இணைந்து உங்கள் அன்பியங்களில் இந்நிலையில் இருப்பவர்களின் பெயர்களை அருட்தந்தை சூசைராஜிடம் விரைவில் தெரிவிக்கவும்.

**On the day of Epiphany we plan to visit elders in every BCC who are confined to their homes due to old age or illness. We would extend our wishes and prayers and give a small gift from the parish. We request the BCC coordinators and BCC representatives for the elders, to find out people who are ailing and give the names to the Assistant parish priest at the earliest.**

## தையல் கலை பயிற்சிப் பள்ளி

நமது பங்கில் தையல் கலை பயிற்சிப் பள்ளி மிகச்சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி கிழமைகளில் காலை 10 மணி முதல் 12 மணி வரை நடைபெருகிறது. தற்போது 10 பேர் பயிற்சியில் உள்ளனர். தையல் கலை பயிற்சிப் பள்ளியை சிறப்பாக நடத்துகின்ற அருட்சகோதரிகளுக்கு நன்றி.
புதிதாக சேர்ந்து பயன் பெற விரும்புகிறவர்கள் அருட்சகோதரி ஜான்சியை தொடர்பு கொள்ளவும் (63796 68947).

**We have a tailoring school functioning in our parish. Classes are held on Mondays, Wednesdays, and Fridays. At present there are 10 students and it has been decided to admit a new batch of students in the first week of December. If anyone is interested please contact Sr.Jancy (6379668947). Rev Sisters need to be appreciated for this wonderful initiative.**





புனித வின்சென்ட் தே பவுல் சபையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது (19.11.2023)



மறைபரப்பு ஞாயிறு உணவு திருவிழா (05.11.2023)



நற்செய்திப் பணிக்கான ஏல நிகழ்ச்சி (26.11.2023)



பாடகர் குழு விழா (22.11.2023)



புனித வின்சென்ட் தே பவுல் சபைசபையின் ஏற்பாட்டில் ஏழை குடும்பத்திற்கு சிறிய வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது.







ஒவ்வொரு அன்பியத்திலும் இறந்தோருக்கான சிறப்பு திருப்பலி உணர்வு பூர்வமாக நடைபெற்றது.




இயேசுவின் கண்மணிகள் சிறுவர் நாள் கொண்டாட்டத்தில் குதூகலத்துடன் பங்குபெற்றனர் (19.11.2023)


Arockia Sagayaraja A
Managing Director
Saffrawn
Facility Solutions Pvt Ltd.
Our Services
Housekeeping Services
Corporate Cleaning Services
Pest Control
Hotel & Restaurant Services
No.109 Padikuppam Main Road, Kamaraj Nagar, Anna Nagar West, Chennai-600040
Mail: saffrawnfacility@gmail.com Contact No.7823979791/9841892656
WWW.SAFFRAWN.IN


SONA COATING PVT. LTD.
Plot No. 2, Nithiyam Kamal, Spartan Nagar, Mugappair (East)
89396 56698 / 99419 58212 | Email: sonacoatingpvtltd@gmail.com
C SANTHOSH
www.sonacoating.in


YAHWEH PITSTOP
We Innovate Mobility
Address: No.84, 1st Main Road, Eri Scheme, Mogappair East, Ch-37.
Our Services:
Tyres
Wheel Alignment
Wheel Balancing
Puncture
Nitrogen
Foam Wash
Polishing & Detailing
Accessories
Sun Film
Seat Cover
Floor Mat
99405 21630 98409 15347
Door Step Assistance & Delivery


ROY ENGINEERINGS
ROY ENGINEERINGS
MOB: 9444911378 / 9600142309
Hexagon Nut
Thread Coupling
Worm Gear
VMC Tool Catcher
Helical Gear
VMC Atc Arm
Gear Shaft
Bevel Gear
Aluminium Flange
PB Worm Gear Shaft
PB Nut
Brass Gear Shaft
Spur Gear
Nylon Bush
PB Spur Gear


EICQU
STUDY ABROAD
& VISA
10+ COUNTRIES
100+ UNIVERSITIES
CONTACT US
08270871090
5th Floor, Awfis, Uthamar Gandhi Rd, opp. The Park Hotel, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034
More Information : www.eicqu.com


RAMESH
HARDWARES
DR. FIXIT
WATERPROOFING EXPERT
asianpaints
FinOlex
PIPES
Asian Paints | Sanitary Wares | Pipes
Fitting Godrej Locks | Welding Googs
Valaiyapathy Salai, Mogappair East
Mob: 79043 88322


WIGEON TOWERS
Property Developers
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
AISHWARYA AVENUE -1
Podavur Village kanchipuram,
Near Parandur
MADHAVARAM
Vadaperumbakkam
Perungavur-2
Chennai 600 103
SUMATHI AMMAL NAGAR
Oragadam Junction
Kunnavakkam
Kancheepuram District
R. Ramesh Babu
Manager
98849 88340
Layout only
Ph No: 044-4851 5365, 044- 4767 1228


WIGEON
TECHNOLOGIES
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
Mfrs.of Jigs & Fixtures,
Press Tools & Machine
Spare Jig Boring
& Fabrication job works
No: 74/9, Periyar 5th cross street, Srinivasa Nagar, Padi
Ph no: 044- 26252333
Mail Id: wigeontech12@gmail.com


YOUR EASY AND FASTEST WAY OF GROCERY SHOPPING
SHOP NOW
ABEL
GROCERY STORE
Natural product with great price
SUPER SALE
44/20, Nehru Nagar, 1st street, Ambattur, Chennai - 600053
FOR MORE INFORMATION, CONTACT
ABEL MALIGAI MANDI - 9940172355
WHATSAPP ORDER FOR DOOR DELIVERY


R. INBARAJ
Proprietor
M: 9382139151
Manpower / staffing (Regular & Contractual)/ all the HR allied services
ROYAL ASSOCIATES
Placement & Consultants
(ISO 9001:2015 Certified Company)
3/475 Valayapathi Salai, Mugappair East, Chennai 600 037.
Tel: 26561970 Email: royalcorporate@gmail.com. www.royalassociates.co


NEWALL ENGINEERING WORKS
Mfrs of Cutting Tools &
Precision Engineering Components
M: 99401 54897, 98400 54817
www.newallengg.in